CHANCERY OF THE CATHOLIC
METROPOLITAN ARCHDIOCESE OF KULA LUMPUR

528, Jalan Bukit Nanas, 50250 Kuala Lumpur, Malaysia,
Tel No 603-2078 8828/ 2078 5089/2072 6606 / Fax 603 2031/3815
chancery@archkl.org / www.archkl.org

**மீட்புக்கால நடமாட்டக் கட்டுப்பாடு ஆணையின் கீழ் வழிபாடு மற்றும் அருட்சாதனக் கொண்டாட்டத்திற்கான வழிகாட்டி**

# பேராயர் அலுவல அறிக்கை

மூத்த ஆமைச்சர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாகோப், அமைச்சர்களின் சிறப்புக் கூட்டத்தில் சிவப்பு மண்டலங்களுக்குள் அமைந்துள்ள இடங்களைத் தவிர்த்து, அனைத்து முஸ்லிம் அல்லாத வழிபாட்டுத் தலங்களையும் இந்த மீட்புக் காலகட்டத்தில் மீண்டும் சமய வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தார். மீட்புக்கால நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை, 2020 ஜூன் 10 முதல் 2020 ஆகஸ்ட் 31 வரை நடைமுறையில் இருக்கும்.

தேசிய ஒற்றுமை துறை அமைச்சகம் மற்றும் தேசிய பாதுகாப்பு மன்றம் வழங்கிய முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு செய்முறைக்கேற்ப (SOP) பின்வருவன கடைபிடிக்கப்பட வேண்டும்:

1. எந்தவொரு வழிபாட்டிலும், பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை வழிபாட்டுத் தலத்தின் (ஆலயத்தின் இட வசதிக்கேற்ப) மூன்றில் ஒரு பங்காக மட்டுமே இருக்க வேண்டும்.
2. காய்ச்சல், இருமல், சுவாச பிரச்சினைகள் மற்றும் சளி போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தும் இறைமக்கள் வழிபாட்டில் பங்கேற்பதற்கு அனுமதியில்லை. நீரிழிவு நோய், புற்றுநோய் மற்றும் பிற உடல்நலக் குறைவுள்ள இறைமக்களும் கலந்து கொள்ள ஊக்குவிக்கப்படவில்லை.
3. 70 வயதுக்கு மேற்பட்ட இறைமக்களும், 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளும் ஆலயத்தில் வழிபாட்டில் கலந்துகொள்வதற்கு அனுமதியில்லை. ஆனாலும் திருப்பலி கொண்டாடும் அருட்பணியாளருக்கு இந்த வயது கட்டுப்பாடு பொருந்தாது.
4. இறைமக்கள் அனைவரும் ஆலயத்திற்குள் நுழைவதற்கு முன்பு வெப்பநிலை அறியப்பட்டு மற்றும் பெயர் பதிவுச் செய்ய வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு செய்முறைக்கேற்ப (SOP) அனைத்து இறைமக்களும் MySejahtera பயன்பாட்டைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். மேலும் தொடர்பு கொள்ள நேரிடும் வேளையில் தொடர்பு கொள்வதற்காக பெயர் மற்றும் வசிப்பிடமறியும் நோக்கத்திற்காக நாங்கள் பெயர் பதிவு செய்வோம். அதிகாரிகளுக்கு உதவும் நோக்கத்திற்காக எடுக்கப்படும் QR குறியீடு ஸ்கேனிங் பட்டியல்களின் நகல் மாமறைமாவட்டத்திலும் பாதுகாக்கப்படும்.
5. பல்வேறு வழிபாட்டுத் தலங்கள் தத்தம் மாநிலங்களில் விதிக்கப்பட்டுள்ள கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை. (தயவுசெய்து அந்தந்த மாநில விதிமுறைகளோடு ஒப்பிட்டுச் சரிபார்க்கவும்)

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, கோலாலம்பூர் பேராயர் மீட்பு கால நடமாட்டக் கட்டுப்பட்டு ஆணை மற்றும் 2020 ஜூன் 15 தேதியிட்ட மீட்பு கால நடமாட்டக் கட்டுப்பாடு ஆணைக்குப் பிந்தைய காலகட்டத்தில் வழங்கிய அருட்சாதனக் கொண்டாட்டத்திற்கான வழிகாட்டிகளை (guidelines) மாமறைமாவட்டம் கடைபிடிக்கும்.

இந்த வழிகாட்டிகள் நமது ஆலயங்கள் மற்றும் சிற்றாலயங்களில் பொது வழிபாடு, சடங்குகள் மற்றும் இதர சமய நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தயாரிக்கவும் செயல்படுத்தவும் பங்குகளுக்கு உதவுவதற்குரியவையாகும்.

## முதல் கட்டம்

- பங்குகளில் சிறப்பு பணிக்குழுவை அமைத்தல்.
- திட்டமிடுதல், தயாரிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல், அறிவிப்பு அட்டைகள் மற்றும் உபகரணங்களைத் தயாரித்தல்.
- தன்னார்வாலர்கள் ஆள்சேர்ப்பு மற்றும் சுத்தம் கவனிப்பு, வரவேற்பு, வெப்பநிலை ஸ்கேன் மற்றும் பதிவு செய்தல், வழிபாட்டுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள பயிற்சிகள் வழங்குதல்
- திருப்பலியில் பங்கெடுக்க அனுமதிக்கப்படுவோரைத் தேர்வுச் செய்வதற்கான வழிமுறைகளைப் பங்கு பேரவைகளோடு கலந்தாலோசித்தல்
- பொது மக்களுக்கான (பொது) திருப்பலிகளுக்கு அனுமதியில்லை.
- நோயிற்பூசுதல் மற்றும் ஒப்புரவு (பாவசங்கீர்த்தனம்) ஆகிய இரண்டு அருட்சாதனங்களுக்கும் முன்கூட்டியே திகதி நியமனம் (Appointment) பெற வேண்டும்.
- இல்லங்களில் மற்றும் இறப்பு கூடங்களில் இறுதிச் சடங்குகளுக்கு 15 பேருக்கு மேலான நபர்கள் கூட அனுமதி இல்லை.

## இரண்டாம் கட்டம்

- வாரத்திற்கு ஒரு திருப்பலி மட்டும் (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்படும். (முதல் திருப்பலி 2020, ஜூன் 28 க்கு முன்னால் கொண்டாடப்படக் கூடாது)
- நிர்ணயிக்கப்பட்ட இந்த செயல்பாட்டு செய்முறையை (SOP) மற்றும் வழிகாட்டுதல்களைச் சோதித்தறிதல், சீர்செய்தல் மற்றும் படிப்படியாக செயல்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- ஆலயத்தில் இறப்பு இறுதிச் சடங்குகள் நிறைவேற்றுதல்.
- நோயாளிகளுக்கு நோயிற்பூசுதலும் குழந்தைகளுக்கு திருமுழுக்கும் இல்லங்களில் கொண்டாட முன்கூட்டியே திகதி நியமனம் வழி (appointment) நிறைவேற்றுதல்.
- திருப்பலிக்கு முன் ஒப்புரவு ( (பாவசங்கீர்த்தனம்) மீண்டும் தொடங்கலாம்.

## மூன்றாம் கட்டம்

- வார இறுதியில் கூடுதல் திருப்பலிகள் கொண்டாடுதல்.
- இறுதிச் சடங்குகள், திருமணங்கள், பெரியவர்களின் திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் ஆலயத்தில் கொண்டாடப்படும்.

## நான்காம் கட்டம்

- தினசரி திருப்பலிகள் தொடங்கப்படலாம்.

மேற்கூறப்பட்ட நான்கு கட்டங்களின் காலம் பங்குத் தந்தையால் தீர்மானிக்கப்பட வேண்டும். கட்டம் 2 -இன் படி, முதல் திருப்பலி 2020 ஜூன் 28 ஆம் தேதிக்கு முன்னதாகத் தொடங்கப்படக்கூடாது. மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இந்த செயல்பாட்டு செய்முறையின் (SOP) நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

மறைக்கல்வி வகுப்புகள், முதியோர்க்கான புகுமுக அருட்சாதன வகுப்புகள் (RCIA), பங்களவிலான கூட்டங்கள், அ.தி.ச. கூட்டங்கள் மற்றும் உருவாக்கப் பயிற்சிகள் அடுத்த அறிவிப்பு வரை தடைசெய்யப்பட்டுள்ளன. பணிக்குழுக்களும் இதர குழுக்களும் தங்களது நடவடிக்கைகளை பல்லூடகத் தொடர்பு சாதனங்கள் (இணையம்) வழி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

ஜூன் 11, 2020 தேதியிடப்பட்ட “திருஅவை நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையிலிருந்து மீள்கிறது” என்ற தமது மேய்ப்புப்பணி மடலில் நமது பேராயர் ஜூலியன் லியாவ் "நற்கருணை உண்மையில் " கிறிஸ்தவ வாழ்க்கையின் ஊற்றும் உச்சமுமாகும்” என்றும் அது எப்போதும் நம்முடைய முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்றும் நமக்கு நினைவூட்டினார். ஆனாலும் கத்தோலிக்கர்கள் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து பொது சுகாதார ஆலோசனைகளுக்கும் ஏற்ப, பாதுகாப்பான முறையில் ஆலயத்திற்கு திரும்புவதை உறுதிசெய்வது திருஅவையின் முன்னுரிமையும் பொறுப்பும் ஆகும். ”

திருப்பலி கொண்டாட்டம் படிப்படியான, கட்டுப்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தொடங்கப்படுவதன் காரணமாகவும், திருப்பலிக்கு வருவோர் மீதும் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் காரணமாகவும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புனித நாள்களில் திருப்பலியில் கலந்துகொள்ள இயலாதவர் களுக்கு பேராயர் சிறப்பு அனுமதி ஆசீரை வழங்கியுள்ளார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். திருப்பலியில் கலந்து கொள்ள இயலாதவர்களின் ஆன்மீக நலனுக்காகப் பேராயர் தொடர்ந்து நேரடி ஒளிபரப்பு வழி திருப்பலியில் பங்கேற்க வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பார்.

**Rev Fr Michael Chua**
**Chancellor**
**Archdiocese of Kuala Lumpur**